**கம்புறுபிட்டிய பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 12 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 02 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து கம்புறுபிட்டிய பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாத செலுத்த வேண்டிய செலவுகள் மற்றும் மூலதன வேலைகளுக்காக கொடுப்பனவு செய்த போது கடன்கொடுத்தோர் மீதியில் இருந்து கழித்து காட்டியிருந்தமையால் ரூபா 1,823,033 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) கூட்டுத்தொகை ரூபா 3,839,060 தொகைக்கான நிலையான சொத்துக்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டு தொடர்பாக கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 3,630,533 தொகையினால் குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

#### 1.3.2 தொங்கல் கணக்கு

தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் முன்னைய ஆண்டுகள் முதல் நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவந்து காணப்படும் ரூபா 1,168,845 தொகைக்கான தொங்கல் கணக்கு செலவு மீதியை இனங்கண்டு அதற்கான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு கணக்குகளை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றிலுள்ள கூட்டுத்தொகை ரூபா 83,641,807 தொகைக்கான 07 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதி மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே, கூட்டுத்தொகை ரூபா 51,798,054 இற்கான ஒப்பற்ற தன்மை அவதானிக்கப்பட்டன.

**1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காலப்பகுப்பாய்வு இனங்காண முடியாத கூட்டுத்தொகை ரூபா 40,343,327 தொகைக்கான பலவின கடன்பட்டோர் மீதிகள் மற்றும் கூட்டுத்தொகை ரூபா 41,307,925 தொகைக்கான கடன்கொடுத்தோர் மீதிகள் காணப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஜீவிய காலத்தை இனங்காண முடியாத கூட்டுத்தொகை ரூபா 4,821,869 தொகைக்கான வைப்பு மீதிகள் காணப்பட்டன.

(இ) கூட்டுத்தொகை ரூபா 431,338 தொகைக்கான கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபையின் கடன் கணக்கு 10 வருட காலமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

கூட்டுத்தொகை ரூபா 98,986,426 இற்கான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நாளது வரை மற்றும் முறைசார் விதமாக பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, பொருட்பதிவேடு மற்றும் வருடாந்த கணிப்பீட்டு அறிக்கை, கூட்டுத்தொகை ரூபா 247,320 தொகைக்கான இருப்பு மீதி தொடர்பாக நாளது வரை பேணப்பட்ட இருப்புப் பதிவேடு, பண்டக் கணிப்பீட்டு அறிக்கை, கூட்டுத்தொகை ரூபா 3,131,673 தொகைக்கான நிலுவை வருமானம், கூட்டுத்தொகை 40,343,328 தொகைக்கான கடன் மீதிகள் ரூபா 40,789,698 தொகைக்கான நிர்மாண வேலைகள் மற்றும் வழங்கள் கடன்கொடுத்தோர் மீதிகள், ரூபா 43,338 தொகைக்கான பெற வேண்டிய முற்பணங்கள், கூட்டுத்தொகை ரூபா 3,029,968 தொகைக்கான 06 வைப்புக்கள் தொடர்பான அட்டவணைகள் துணைப் பதிவேடுகள், காலப்பகுப்பாய்வு மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தல்கள் ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் அக்கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகளை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு கணக்காய்வின் போது முடியாதிருந்தது.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,884,716 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,129,576 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 5,755,140 இற்கான வளர்ச்சி ஒன்றினைக் காட்டியது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் வருமானத்தின் 79 சதவீதத்தை மீறிய மொத்த மீண்டுவரும் செலவுகள் காணப்பட்டது.

(ஆ) சபையினால் சுயமாக உருவாக்கிய வருமானத்தை மிகைத்து மீளாய்வாண்டில் போலவே கடந்த இரண்டு வருடங்களிலும் கணிசமான பெறுமதிகளில் மீண்டுவரும் செலவுக் அதிகரித்திருந்ததுடன் சபையினால் சுயமாக உருவாக்கி மீண்டுவரும்

செலவுகளை மேவகை செய்வதற்காக எவ்விதத்திற்கும் இயலாத ஒரு நிலைமையினைக் காட்டியது.

**2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்**

மீளாய்வாண்டிற்கான கடன்பட்டோர் மீதியில் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக ரூபா 40,343,227 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 16,922,635 இற்கான பெற வேண்டிய முத்திரை கட்டணம் காணப்படாமையால் நடைமுறை மற்றும் விரைவு விகிதங்களின் பிரகாரம் திரவத்தன்மை காணப்படவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**2.4 வருமான நிருவாகம்**

**2.4.1 வீதவரி**

ஆரம்ப நிலுவை ரூபா 810,892 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 921,678 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 1,732,570 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 875,659 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 856,911 தொகைக்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது.

**2.4.2 ஏக்கர் வரி**

ஆரம்ப நிலுவை ரூபா 304,981 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 24,628 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 329,609 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 13,713 தொகையாகக் காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 315,896 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

**2.4.3 வாடகை வருமானம்**

ஆரம்ப நிலுவை ரூபா 1,605,382 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 5,894,777 தொகை ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 6,960,153 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 5,965,921 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 994,238 தொகை ஆகும்.

**2.4.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

ஆரம்ப நிலுவை ரூபா 79,905 தொகையாக இருந்ததுடன், ஆண்டின் போது ரூபா 1,135,862 இற்கான சிட்டை இடலுடன் ரூபா 1,214,952 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

**2.4.5 நீர்க் கட்டணம்**

ஆரம்ப நிலுவை ரூபா 2,396,656 தொகையாக இருந்ததுடன் ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 3,796,034 தொகையுடன் ரூபா 6,192,690 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 4,288,801 தொகையாகக் காணப்பட்டமையால், ஆண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,903,890 தொகையாகிய உயர்ந்த நிலுவை மீதியொன்று காணப்பட்டது. பிரதேச சபையினால் நடாத்தப்படும் 06 நீர்ச் செயற்திட்டங்களின் பராமரிப்பு விடயங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 3,610,254 தொகை சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது.

### 2.4.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணம் ரூபா 16,982,635 தொகை மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 778,697 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

### 3.1.1 மனித வள முகாமைத்துவம்

இரண்டாம் தர மற்றும் ஆரம்ப தர பதவிகளில் காணப்பட்ட 05 வெற்றிடங்களை நிரப்புவது போலவே மிகை பதவியணி 36 இனை முறைப்படுத்துவதற்காகவும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.1.2 பதவியணிக் கடன்

20 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 165,301 தொகையான கடன் மீதி காணப்பட்ட போதிலும், அவற்றை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இவற்றில் ரூபா 62,126 இற்கான மீதியொன்று 05 வருட காலம் முதலும், மேலும் ரூபா 103,175 இற்கான மீதியொன்று ஒரு வருடத்தை விட மிகையான காலம் முதலும் அறவிடப்படாமல் காணப்பட்டது.

### 3.2 ஒப்பந்த நிருவாகம்

கனேகம பல்கருமக் கட்டிடத்தை நிர்மாணக்கும் நிர்மாண வேலையின் தாமதத்திற்காக உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் ரூபா 177,129 இற்கான தாமதக் கட்டணம் அறவீடு செய்யபப்பட்டிருக்கவில்லை.

### 3.3 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது குப்பைகள் சேகரிப்பதற்காக ரூபா 6,174,314 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் சேகரிக்கப்பட்ட குப்பைகளை நகரத்திற்கு மத்தியில் முறைசாராத விதமாக அகற்றப்படுவதனால் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன. 2000 இன் 53 ஆம் இலக்க 1988 இன் 56 இலக்கம் ஆகிய சட்டங்களின் மூலம் திருத்திய 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டத்தின் பிரகாரம் வெளியிடப்பட்ட 1533/16 ஆம் இலக்க மற்றும் 2008 ஜனவரி 25 திகதிய சுற்றாடல்சார் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், சபையினால் சுற்றாடல் அனுமதிப்பத்திரமும் பெற்றிருக்கவில்லை.

(ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அபிவிருத்திக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,000,000 இற்கான தொகையில் இருந்து பழைய அலுவலக கட்டிடத்தின் கூரை பழுதுபார்க்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டிலுள்ள 02 வருமான விடயங்கள் நெருங்கியிருக்காத இலக்கிடப்பட்ட வருமானம் ரூபா 3,878,203 தொகையாகக் காணப்பட்டதுடன் 07 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 6,255,743 தொகைக்கான சேமிப்புகளும், செலவு விடயங்கள் ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட வரையறையை மிகைத்து ரூபா 71,698 தொகையினை செலவு செய்யப்படலும் காணப்படாமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை அரச நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய த.ப.பா/யஹ/01/ந.ச.லே இலக்கங் கொண்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சபையினால் நியமிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 441,578 இற்கான சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) வருமானம் சேகரித்தல்
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு